DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 05.03.2026

| | |
|---|---|
| Case No. | : CC. No.29/2025 |
| Deposition of Witness for Prosecution | : PW.1 |
| Name | : தமிழரசன் |
| Father Name | : சரவணன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : xxxx |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E.Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 05.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்)**
**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்(11.59.A.M):-**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சேலம் மாவட்டம், தாதகப்பட்டியில் குடியிருந்து வெள்டிங் பட்டறையில் வேலை செய்து வருகின்றேன். இந்த விபத்தில் இறந்துபோன ரேவதி என்பவர் எனது தாயார் ஆவார். கடந்த 09.02.2025-ம் ஆண்டு எனது அம்மா வேலை செய்து வந்த வீட்டின் உரிமையாளரிடமிருந்து இரவு 10.30 மணிக்கு எனக்கு போன் செய்து எனது அம்மாவும், விஜய் என்பவரும் இருசக்கர வாகனத்தில் ஏற்காட்டை சுற்றி பார்த்துவிட்டு இரவு திரும்ப சேலம் நோக்கி வந்துகொண்டிருந்தபோது 17வது கொண்டை ஊசி வளைவு அருகே வந்தபோது திடிரென பிரேக் போட்டதில் எனது அம்மாவிற்கு தலையில் அடிப்பட்டதாகவும், ஏற்காடு அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுவிட்டு பின்னர் சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு சென்றதாக கேள்விபட்டேன்.

நான் சம்பவத்தை கேள்வி பட்டு சேலம் அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். பின்பு எனது அம்மா சிகிச்சை பலனளிக்காமல் 11.02.2025-ம் தேதியன்று இறந்துவிட்டார். இந்த சம்பவம் தொடர்பாக ஏற்காடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் அந்த புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1. சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 2 முதல் 7 வரையுள்ளவர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். இதற்கு முன் காவல் நிலையம் சென்று புகார் எழுதியுள்ளேனா என்றால் எழுதியுள்ளேன். புகாரினை நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதினார்கள். போலீசாரிடம் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் 09.02.2025-ம் தேதி மதியம் 12.00 மணி. பட்டியல் சாட்சிகளிடம் எங்கு வைத்து கையொப்பம் பெறப்பட்டது என்றால் சேலம் அரசு மருத்துவமனையில் வைத்து கையொப்பம் பெறப்பட்டது.

2. புகார் கொடுத்த அன்றே பட்டியல் சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றனரா என்றால் இல்லை 11.02.2025-ம் தேதியன்று கையெழுத்து பெற்றனர். என்னுடன் சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்த போலீசாரின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு எத்தனை முறை சென்றீர்கள் என்றால் 2 முறை வந்தேன், 6 தாள்களில் என்னிடம் கையெழுத்து வாங்கினர். அதில் அனைத்தும் எழுதிய தாள்களே ஆகும். 6 தாள்களிலும் என்ன என்ன விவரம் எழுதியிருந்தது என்று தெரியாது என்றால் சரியல்ல தற்போது நினைவில் இல்லை.

3. எனக்கும் எனது அம்மாவிற்கும் சரியான பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. எனது அம்மா எத்தனை நாட்கள் வீட்டில் இல்லை என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும் ஒரு இரவு மட்டுமே எனது அம்மா வீட்டில் இல்லை. எனது தாயார் இறந்ததினால் பிரேத பரிசோதனை விசாரணைக்காக மட்டுமே இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால்

சரியல்ல. வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், ஆஜர் எதிரிக்கு எதிராக பொய்யாக புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. அதிவேகம், அஜாக்கிரதை என்ற வார்த்தையானது குற்றம் எழவேண்டி சேர்க்கப்பட்ட வார்த்தைகள் என்றும், மேற்படியான செயல்பாடுகள் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.18.P.M)**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.03.05 12:31:32 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.